**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.65/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லலிதா | மதம் | : இந்து |
| க/பெ | : மணி | ஜாதி | : -- |
| வயது | : 68 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : எலுமிச்சை வியாபாரம் | வட்டம் | : திருத்தணி |

**09.02.2026**
**வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் நாங்கள் வீட்டு மனை வாங்கியிருந்தோம். அந்த சொத்திற்காக தாக்கல் செய்தோம். அந்த சொத்து யாருடையது என்றால் என் கணவர் வாங்கியதாகும். அது ஆதியில் தேசம்மாள், தனம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். முதலில் தேசம்மாளுக்கு பாத்தியப்பட்டாதா தனம்மாளுக்கு பாத்தியப்பட்டதா என்றால் முதலில் தனம்மாளின் சொத்தாகும். இப்போது தேசம்மாள் சொத்தாகும். தனம்மாளுக்கு சொத்து எப்படி வந்தது என்றால் அவரது பெற்றோர் தனம்மாளுக்கு கொடுத்தனர். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தனம்மாளுக்கு அரசாங்கம் பட்டா கொடுத்த சொத்து என்றாலும் ஆமாம். தனம்மாளுக்கு வாரிசு யாரும் இல்லை என்றால் அவருக்கு ஆண் குழந்தைகள் இல்லை. நாங்கள் மூன்று பெண் பிள்ளைகள் தான் உள்ளோம்.

6. தனம்மாளின் வாரிசு சான்று எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தனம்மாளுக்கு அரசு கொடுத்த சொத்திற்கு தனம்மாள் மட்டுமே உரிமையாளர் என்றாலும் தனம்மாளுக்கு பின்பு அவரது வாரிசுக்கு மட்டும்தான் சொத்து பாத்தியம் என்றாலும் நாங்கள் மூன்று பெண்கள் உள்ளோம். நான் சொல்வதுபோல் வழக்கு சொத்து என் கணவர் மணியின்

சொத்து என்றால் தனம்மாளின் சொத்து எந்த அடிப்படையில் என் கணவர் மணிக்கு வந்தது என்றால் அண்ணன் மகன், மருமகன் என்பதால் வீடு இல்லை என்பதற்காக தேசம்மாள் வாங்கி கொடுத்துவிட்டார். தனம்மாள் சொத்திற்கு நாங்கள் உரிமை கொண்டாட முடியாது என்றாலும் அது தனம்மாளுக்கு மட்டுமே அது பாத்தியப்பட்டது என்றாலும் நாங்கள் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நான் மணியின் மனைவி என்பதால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(9, 10 பிரதிவாதிகள் தரப்பில் எந்த எடுத்துரைப்பும் இல்லாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)

(மறு விசாரணை இல்லை)